
# திராவிடத்தால் வாழ்கிறோம்

949

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

20

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுப் பூர்வமாக விவரிக்கும் தொடர்!

# சமூகநீதிச் சட்டம் கலைஞருக்கே சாத்தியம்!

*பெற்றாலும், அது பொருட்டில்லை என்கிறபோது, சில பள்ளிகள், மாணவர்கள் நுழைவுத் தேர்வுக்காக 11-ஆம் வகுப்பிலிருந்தே தயாராவதும், அதற்கு லட்சங்களில் செலவு செய்வதும் நடக்கிறது. இதேபோன்ற நிலைதான், 2006-ஆம் ஆண்டுவரை தமிழ்நாட்டில் அண்ணா பல்கலைக் கழகத்தில் பொறியியல் பட்டப் படிப்புகளுக்கும் இருந்தது. CET நுழைவுத் தேர்வில் வெற்றிபெற்றால்தான், BE/B.Tech படிப்புகளில் சேரமுடியும் என்கிற நிலை. தவிர, ஒன்றிய அரசு கல்விநிறுவனங்களில் சேர வேண்டுமெனில், அதற்கும் தனியாக நுழைவுத் தேர்வு எழுத வேண்டும் என்கிற நெருக்கடியும் இருந்தது.*

### கல்விச் சீர்திருத்தத்துக்கான குரல்

*அதாவது, அரசுப் பள்ளியில் படித்து, 90 சதவிகிதத்துக்கு மேல் மதிப்பெண் பெற்ற அடித்தட்டுக் குடும்பத்து மாணவனால் சிறந்த பொறியியல் கல்வியை எளிதாக எட்ட முடியாது. தனிப்பயிற்சிகள் பெரும் செலவு பிடித்தன. தனியார் பள்ளிகள் நேரடியாக நுழைவுத்தேர்வுக்கு, மாணவர்களைத் தயார்படுத்தி வந்தன. இந்த அழுத்தம் மாணவர் - பெற்றோர்- கல்வியாளர்கள் மத்தியில் பெரும் வெடிப்பாக உருவாக, கல்விச் சூழலில் பெரும் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என்று பேசும் நிலை உருவானது. அதைத்தான் 2005 - 2006ஆம் ஆண்டுகளில் தேர்தல் ஆதாயமாக மாற்ற நினைத்தார் அம்மையார் ஜெயலலிதா. ஆனால், அவரது அவசரகோலத்தில் தமிழ்நாட்டு நலன் சார்ந்த அக்கறையில்லை என்பதற்கு, நீதிமன்றத் தீர்ப்புகளே எடுத்துக்காட்டு.*

*2006-ஆம் ஆண்டு மே மாதத்தில் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார் கலைஞர். அந்த ஆட்சிக்காலத்தில் கல்வித்துறையில் அடுக்கடுக்கான சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார் நம் தானைத் தலைவர். முதல் சட்டமன்றக் கூட்டத்திலேயே Act - 2 of 2006 (Tamil Nadu Admission in Professional Educational Institutions Act, 2006) என்கிற சட்டத்தினைக் கொண்டு வந்தார். எம். அனந்தகிருஷ்ணன் குழு அளித்த பரிந்துரைப்படி நுழைவுத்தேர்வை நீக்கும் சட்ட முன்வடிவு 06.12.2006 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. 05.03.2007 அன்று சட்டம் (Act No.3 of 2007) அரசிதழில் வெளியிடப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப்பெற்று 07.03.2007 முதல் நடைமுறைக்கு வந்தது. நுழைவுத் தேர்வு நடைபெறுவதற்கு முன்பே சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுவிட்டது.*

### உயர்நீதிமன்றத்தில் வழக்கு

*இந்தச் சட்டத்தை எதிர்த்து, தனியார் நுழைவுத்தேர்வு பயிற்சி மையங்களும், அவர்கள் ஆதரவுடன் மாணவர்களும் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். 'எஸ்.அஸ்வின்குமார் எதிர் தமிழ்நாடு அரசு' என்கிற அந்த வழக்கில் ஈரோடு, நாமக்கல் மாவட்டத்தில் படித்த சுமார் 125 மாணவர்கள் தங்களையும் இணைத்துக்கொண்டனர். திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி உள்ளிட்டோர் தங்களையும் வழக்கில் இணைத்துக்கொள்ள வேண்டும் எனக் கோரிக்கை வைத்தனர். நீதிபதிகள் பி.கே.மிஸ்ரா, ஜே.ஏ.கே.சம்பத்குமார் ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரணை செய்து, 27.04.2007 அன்று அளித்த தீர்ப்பில் , "தமிழ்நாடு அரசு கொண்டு வந்த சட்டம் சரியானதே" எனத் தீர்ப்பு வழங்கினர்.*

*அந்தத் தீர்ப்புக்குப் பின்னர், தமிழ்வழிக் கல்வியில் பயின்ற மாணவர்களும், கிராமப்புற ஏழை மாணவர்களும் பெரும் பயன்பெறத் தொடங்கினர். பொறியியல் கல்லூரிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை மளமளவென உயர்ந்தது.*

*2006 - ஆம் ஆண்டு 12 ஆயிரம் மாணவர்கள் மட்டுமே பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்த நிலையில், நுழைவுத் தேர்வை ரத்து செய்த பின்னர், 2007-ஆம் ஆண்டில், 20,000 மாணவர்கள், 2008-ஆம் ஆண்டில் 34,000 மாணவர்கள், 2009-ஆம் ஆண்டில் 35 ஆயிரம் மாணவர்கள், 2010-ஆம் ஆண்டில் 54,000 பேர் என எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. 2025-26-ஆம் கல்வியாண்டில் அண்ணா பல்கலைக்கழகத்தின் அனுமதி பெற்ற 423 கல்லூரிகளில் 1,90,624 மாணவர்கள் சேர்க்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன என்கிறது புள்ளிவிவரங்கள்.*

*கல்வித்துறையில் கலைஞர் உருவாக்கிய இந்த புரட்சியால்தான் தமிழ்நாட்டின் உயர்கல்வித் துறை அடுத்த கட்டத்திற்கு முன்னேற்றம் கண்டது. இன்று, இந்தியாவில் ஆண்டுதோறும் பொறியியல் பட்டம் பெறுபவர்களில், 17 சதவிகிதம் பேர் தமிழர்கள். 2007-ஆம் ஆண்டு முதல் இன்று வரை தமிழ்நாட்டில் பொறியியல் படிப்புகளுக்கு பொது நுழைவுத் தேர்வு கிடையாது. அன்று கலைஞர் எடுத்த சமூகநீதி நோக்கிலான முடிவுதான், கெனித் ராஜ் அன்பு போன்றோரின் கல்விக் கனவுகளுக்கு கதவு திறந்து விட்டது. இன்று, ரோபோட்டிக் ஆராய்ச்சியாளராக உலகின் பல மேடைகளில் கலைஞரின் சமூகநீதி சட்டத்துக்கு சாட்சி உரை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார் அவர்.*

...தொடரும்

ஓவியம் : ரவி பேலட்




*இந்தியாவில் ஐ.ஐ.டி. உள்ளிட்ட உயர்கல்வி நிறுவனங்களில் இளநிலைப் படிப்புகளில் சேர, ஜே.இ.இ. (JEE) என்கிற நுழைவுத் தேர்வு எழுதி தேர்ச்சி பெறுவது கட்டாயம். குறிப்பாக, தேசிய தொழில்நுட்பக் கழகம் (NIT), இந்தியத் தகவல் தொழில்நுட்பக் கழகங்கள் (IIIT), ஒன்றிய அரசின் நிதியுதவி பெறும் பிற தொழில்நுட்ப நிறுவனங்கள் (CFTI) மற்றும் மாநில அரசு உதவிகளுடன் அல்லது அங்கீகரித்த சில குறிப்பிட்ட உயர்கல்வி நிறுவனங்களில், இளங்கலை பொறியியல் படிப்பு (BE / B.Tech) சேர்க்கைக்கான ஒருங்கிணைந்த நுழைவுத் தேர்வாக ஜே.இ.இ. முதன்மைத் (JEE MAIN) தேர்வு நடத்தப்படுகிறது.*

*ஐ.ஐ.டி.-யில் சேர வேண்டுமெனில் ஜே.இ.இ. முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் ஜே.இ.இ. அட்வான்ஸ்ட் (JEE - ADVANCED) என்கிற மற்றொரு நுழைவுத் தேர்வு எழுத வேண்டும். இந்தத் தேர்வுக்கு ஒரு மாணவர் தயாராக 2 ஆண்டுகளாவது பயிற்சி எடுக்க வேண்டும் என்கின்றனர். அதாவது +2 படித்த பின்னர் அல்லது +2 படித்து வெளிவரும்போதே தயாராகியிருக்க வேண்டும்.*

*ஒரு பாடத்திட்டத்தில் உயர்நிலைக் கல்வி படித்துக் கொண்டிருக்கும்போதே, தேசிய தேர்வு முகமை நடத்தும் தேர்வுக்கும் தயாராக வேண்டும். இடைநிற்றல் இல்லாமல் உயர்கல்வியில் சேர வேண்டும் எனில், மாணவர்கள் இந்த இரட்டை தேர்வு என்கிற அழுத்தத்தை சந்திக்க வேண்டும். இந்தத் தேர்வுக்குப் பயிற்சி பெற குறைந்தபட்சம் ஆண்டுக்கு ஒரு லட்ச ரூபாய் முதல், இரண்டரை லட்ச ரூபாய் வரை செலவு செய்ய வேண்டும். தேசிய அளவிலான கல்வி நிறுவனத்தில் ஒரு மாணவர் சேர வேண்டுமெனில், இதுதான் முதன்மைத் தகுதியாக உள்ளது. 'இதைத்தான் தகுதி' என்கின்றனர் சிலர்.*

*+2 தேர்வில் எவ்வளவு மதிப்பெண்கள்*

> **கல்வித்துறையில் கலைஞர் உருவாக்கிய இந்த புரட்சியால்தான் தமிழ்நாட்டின் உயர்கல்வித் துறை அடுத்த கட்டத்திற்கு முன்னேற்றம் கண்டது. இன்று, இந்தியாவில் ஆண்டுதோறும் பொறியியல் பட்டம் பெறுபவர்களில், 17 சதவிகிதம் பேர் தமிழர்கள்.**

## கல்வி ஒன்றே அழியாச் சொத்து!

போர்ச்சூழலில் கூட, மாணவர்களின் கல்வி தடைபடக்கூடாது என்ற உணர்வின் அடிப்படையில், உக்ரைன் நாட்டில் கார்கிவ் நகரின் மேயர் இகோர் தெரெகோவ், நிலமட்டத்துக்குக் கீழே அமைக்கப்பட்ட பாதாள அறைகளில் வகுப்புகளை இயக்க நடவடிக்கை எடுத்துள்ளார். இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள 7 பள்ளிகளில் 17,000 மாணவர்கள் சென்று படிக்கும் வாய்ப்பு உருவாகியுள்ளது. இத்தகைய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. ஆனால், இந்தியாவிலோ பா.ஜ.க. ஆளும் உத்தரப் பிரதேச மாநிலத்தில், 5,000 பள்ளிகளை இழுத்து மூட திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. 50 மாணவர்களுக்குக் குறைவாக உள்ள பள்ளிகளை மூடிவிட்டு, அம்மாணவர்களை வேறு பள்ளியில் இணைந்துகொள்ளச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கம். உத்தரப் பிரதேசத்தில் உள்ள 1.40 லட்சம் அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் 29,000 பள்ளிகளில் 50 மாணவர்களுக்கு குறைவாகவே உள்ளனர். எனவே, பள்ளிகளை இழுத்து மூடும் திட்டம் இந்த ஐந்தாயிரம் பள்ளிகளுடன் நின்றுவிடாது என்பதே அம்மாநில கல்வியாளர்களின் எச்சரிக்கை.

மறுபுறம் தமிழ்நாட்டில் திராவிட மாடல் அரசு பள்ளிகளை நவீனப்படுத்துவது, கட்டமைப்புகளை மேம்படுத்துவது, கற்றல் திறனை உயர்த்துவது என முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு, அரசுப் பள்ளிகளை வளப்படுத்தி வருகிறது. 1 முதல் 9ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களின் கற்றல் நிலைகளை மாதாந்திரம் மதிப்பீடு செய்யும் புதிய முறையை செயல்படுத்தத் தொடங்கியுள்ளது. 'எல்லார்க்கும் எல்லாம்' என இயங்கி வரும் நம் அரசு, The Kennedy-Lugar Youth Exchange and Study (YES) எனும் திட்டத்தின் மூலம் ஈரோடு அரசு மாதிரிப் பள்ளி மாணவி தாட்சண்யா, பெல்டனில் உள்ள ஹார்ட்லேண்ட் பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் வாய்ப்பை உருவாக்கியிருக்கிறது.

பள்ளிகளை மூடி மாணவர்களின் கனவுக் கதவுகளை அடைப்பது பா.ஜ.க. மாடல். பள்ளிகளை வளப்படுத்தி, வாய்ப்புகளைப் பெருக்குவது திராவிட மாடல்!

## ஃப்ளாஷ்பேக்



### அன்பகம் நிதியாக 11,111 ரூபாய்!



அறந்தாங்கி வெங்கடேசன்

1992-ஆம் ஆண்டு பிப்ரவரி 17-ஆம் தேதி புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கியில் நகர இளைஞர் அணி சார்பில், நடத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார். அப்போது, நகர இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த நான், 'அன்பகம் நிதி'யாக 11,111 ரூபாய், நகர இளைஞர் அணி சார்பில், தலைவரிடம் வழங்கினேன். மாவட்டச் செயலாளராக இருந்த அண்ணன் அ. பெரியண்ணன், இளைஞர் அணித் துணைச் செயலாளராக இருந்த அண்ணன் அன்பில் பொய்யாமொழி, மாவட்டத் துணைச் செயலாளராக இருந்த அண்ணன் சி. அம்பிகாபதி, முன்னாள் நகரச் செயலாளர் மு.சீனிவாசன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் த.சந்திரசேகரன் ஆகியோர் முன்னிலையில், அன்பகம் நிதி வழங்கியது மறக்க முடியாத நிகழ்வு.

**– அறந்தாங்கி வெங்கடேசன், வழக்கறிஞர், அறந்தாங்கி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### அலை அலையாக கைது!

1963-ஆம் ஆண்டு இறுதி தொடங்கி, 1965-ஆம் ஆண்டு, ஜனவரி வரையில் இந்தித் திணிப்புக்கு எதிராக, கழகம் அறிவித்த சட்ட நகல் எரிப்புப் போராட்டம் - மறியல் போராட்டத்தில், தமிழ்நாடு முழுவதும் அலை அலையாக கழகத்தினர் கைதாகி, சிறைசென்றனர். ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரள மாநிலங்களில் அங்குள்ள கழகத்தினர் மறியல் போராட்டம் மட்டும் நடத்தினர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.